மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்ன? விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம். அதை ஆதரித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

4. அறிவிப்புகள்

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2008-2009- மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 10-11-2008 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2008-2009 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்மீதும் தலா ஐந்து வெட்டுத் தீர்மானங்களுக்கு மிகாமல் இன்று (11-11-2008) மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி